## வங்கியின் தலைவரைப் பற்றி

- ஈரோடு மாவட்டம் பவானி அருகில் உள்ள தேவபுரம் என்ற கிராமத்தில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த திரு.என்.கிருஷ்ணராஜ் மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் டிப்ளமோ பயின்றுள்ளார்.

- 1989ம் வருடம் முதல் அரசியலில் ஈடுபட்டு மக்கள் நலப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சேவையாற்றி வருகின்றார். 2013 ஆம் வருடம் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தலில் பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 17.07.2013 தேதியில் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

- ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 23 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக்குழுவின் தலைமையேற்று வங்கிக்குத் தேவையான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி வங்கி நிர்வாகத்தை திறம்பட நடத்திட உறுதுணையாக உள்ளார்.

- வங்கியின் நிர்வாகக்குழுவினர் மற்றும் அலுவலர்கள் மற்றும் இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள் ஆகிய அனைவரையும் ஒருங்கிணைத்து வங்கியின் நிர்வாகச் செயல்பாடுகளை திறம்பட மேற்கொண்டு வருவதோடு வங்கியின் வாடிக்கையாளர்களின் நலன்களைக் காத்திடும் வகையில் புதுமையான திட்டங்களை வங்கியில் அறிமுகப்படுத்தியுள்ளார்.

- வங்கியில் பணியாற்றும் அனைத்து நிலைப் பணியாளர்களும் எந்த நேரத்திலும் தலைவரை நேரில் சந்தித்தும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும் தங்களது கோரிக்கைகள் மற்றும் கருத்துக்களை வெளிப்படையாக எடுத்துரைக்கும் நிலை தலைவர் அவர்களின் தோழமை உணர்வுடனான அணுகுமுறையை ஏற்படுத்தியுள்ளது.

## வங்கியின் புதிய திட்டங்கள்

- தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டமான **நெசவாளர் கடன் அட்டை திட்டத்தை** மாநிலத்திலேயே முதன்முறையாக நமது வங்கியில் 19.11.2014 அன்று மாண்புமிகு சுற்றுச் சூழல்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய மத்திய காலக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழகத்திலேயே முதல் முறையாக 24.04.2015 ம் தேதியில் ஈரோட்டில் **வீட்டு வசதிக் கடன் மேளா** ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும்

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது. அதே போல 09.01.2016 தேதியில் திருப்பூர் மாவட்டத்தில் **வீட்டுவசதிக்கடன் மேளா** திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக வட்டி குறைக்கப்பட்டு 9.75 சதவிகித வட்டியில் வீட்டு வசதிக் கடன் வழங்கப்பட்டு வருகிறது .

- சிறுக சிறுகச் சேர்க்கப்படும் வருமானத்தினை அதிக வட்டி வழங்குவதாகக் கூறி ஏமாற்றும் நோக்குள்ள தனியாரிடம் போலியான திட்டங்களில் சேர்ந்து பொதுமக்கள் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு தமிழகத்திலேயே முதன்முறையாக 31.10.2015 அன்று ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் **ஜெயமகள் தீபாவளி சிறப்புத் தொடர் வைப்புத் திட்டம் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்ர்** அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

- இணைப்புச் சங்கங்களின் நலன் காக்கும் விதத்தில் விவசாயப் பெருமக்களுக்கு அதிக வருமானம் கிடைக்க வழி செய்யும் விதமாக கறவை இனங்கள் மற்றும் கால் நடைகள் வாங்கிப் பராமரிக்க தொடக்க கூட்டுறவு சங்கங்கள் மூலம் மத்திய காலக்கடன் வழங்க வங்கி கிளைப் பகுதிகளில் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு அதிக அளவில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

## <u>வங்கி பெற்ற பாராட்டுக்களும் விருதுகளும்</u>

- 20.11.2015 - ம் நாளன்று சேலத்தில் நடைபெற்ற, மாநில அளவிலான 62-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியில் சிறப்பான செயல்பாட்டிற்கான சிறப்பு விருது (Special Award), **மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்** அவர்களால் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது

- மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அதிக அளவில் கடன் வழங்கியமைக்காக தொடர்ந்து 4 ஆண்டுகளாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விருது வழங்கப்பட்டுள்ளது.

- வங்கி ஆரம்ப நாள் முதல் தொடர்ந்து அனைத்து இனங்களிலும் வளர்ச்சி அடைந்து வருவதோடு லாபத்திலும் செயல்பட்டு வருகிறது.